**SEC 2 EXAM REVISION WORKSHEETS (PAPER 2) - LEVEL 2**

**உயர்நிலை 2 சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 2**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | தேர்வுத்தாள் 1 | 1 - 9 |
| 2 | தேர்வுத்தாள் 2 | 10 - 18 |
| 3 | தேர்வுத்தாள் 3 | 19 - 27 |
| 4 | தேர்வுத்தாள் 4 | 28 - 36 |
| 5 | தேர்வுத்தாள் 5 | 37 - 45 |
| 6 | தேர்வுத்தாள் 6 | 46 - 54 |
| 7 | தேர்வுத்தாள் 7 | 55 - 63 |
| 8 | தேர்வுத்தாள் 8 | 64 - 72 |
| 9 | தேர்வுத்தாள் 9 | 73 - 81 |
| 10 | தேர்வுத்தாள் 10 | 82 - 90 |
| 11 | தேர்வுத்தாள் 11 | 91 - 99 |
| 12 | தேர்வுத்தாள் 12 | 100 - 108 |
| 13 | அருஞ்சொற்கள் (தேர்வுத்தாள் 1 to 12) | 109 - 118 |
| 14 | விடைத்தாள்கள் | 119 - 138 |


WORDSMITH BEYOND LEARNING
EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

# தேர்வுத்தாள் 1

/70

'அ' பிரிவு

**A1 மரபுத்தொடர்கள், இணைமொழிகள், செய்யுள்கள் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

Q1 திரு. அசோகன் தன் கூட்டுக் குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்ய தினமும் ____________________ உழைத்து வந்தார்.

Q2 இடுக்கண் வருங்கால் ____________________
அடுத்தூர்வது அஃதொப்பது இல்

Q3 கிடைத்த எளிமையான வேலையைக் கூட முறையாக செய்யாத மனோஜ் தன் திருமண வாழ்க்கை ஆடம்பரமாக நடக்குமென்று ____________________ கட்டி வாழ்ந்தான்.

Q4 கணேசன் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டோருக்குப் பணவுதவி செய்து ____________________ பார்த்து அவன் பெற்றோர் அவனை **<u>மெச்சினர்.</u>**

Q5 திருமண சடங்குகள் முடிந்ததும் ஐயர் திருமண தம்பதிகளைப் பெற்றோரின் ____________________ **<u>ஆசி</u>** பெறும்படி கூறினார்.

| | |
|---|---|
| 1. ஒய்வு ஒழிச்சலின்றி | 6. அதனை நகுக |
| 2. கைகொடுத்ததை | 7. காலில் விழுந்து |
| 3. மனந்திறந்து | 8. கதைகட்டி |
| 4. நகுக அதனை | 9. மனக்கோட்டை |
| 5. இன்பதுன்ப | 10. கைவிரித்ததை |

WORDSMITH BEYOND LEARNING

**A2 முன்னுணர்வுக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள் பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

உடலை வளைத்து உடற்பயிற்சி செய்ய நேரமில்லாத சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். துள்ளியோடும் வயதில் இருக்கும் மாணவர்களையும் பாடச்சுமைகள் வெளியில் போய் விளையாட விடுவதில்லை. ஆனால், உடற்பயிற்சி என்பது நம் உடலுக்கு மிகவும் முக்கியமான ஒன்று. அதை நாம் Q6. ____________________________ கூடாது. இதற்குத் தீர்வாக அமைகிறது நடைபயிற்சி. நடை என்பது நம் அன்றாட வாழ்க்கை முறையில் Q7. ____________________________ ஒன்று. அதை நாம் தவிர்க்க இயலாது. நாம் சற்று விரைவுடனும், தொடர்ச்சியாகவும் செய்யும்போது அது நம் உடலுக்கு நல்ல உடற்பயிற்சியாகிறது. நல்ல நடை பயிற்சி மேற்கொள்வது மன அமைதியை ஏற்படுத்தி, மன இறுக்கம், மன அழுத்தம், மன உளைச்சல், மனச்சோர்வு Q8. ____________________________ போக்குகிறது. யோகா, மெதுவோட்டம், கயிற்றாட்டம், நீச்சல் போன்ற பயிற்சிகளைவிட நடப்பதை நாம் மிக எளிமையாகச் செய்ய முடியும். அன்றாடம் நடப்பதை ஒரு Q9. ____________________________ வைத்துக் கொண்டால் பல நோய்கள் வராமல் இருப்பதையும் தடுக்கலாம். நடைபயிற்சியின் மூலம் நன்மைகள் பெறுவதற்கு நாம் வாரத்திற்கு மூன்று முறை 30-45 நிமிடங்கள் நடந்தால் போதும். காலையும் மாலையும் நடப்பதற்கு **<u>உகந்த</u>** நேரம். நடைபயிற்சி செய்வதற்குப் பணம் செலவழிக்க Q10. ____________________________. செலவில்லாத இப்பயிற்சி நமக்கு ஆரோக்கியத்தைக் கொடுப்பதோடு உடல் பருமனையும் குறைக்கிறது.

| | |
|---|---|
| 1. போக்குகிறது | 6. தேவையில்லை |
| 2. பழக்கமாக | 7. போன்றவற்றை |
| 3. நெருங்கிவிட்ட | 8. மறந்துவிட |
| 4. வேண்டும் | 9. ஒன்றிவிட்ட |
| 5. தவிர்க்கிறது | 10. பாடமாக |

**A3 பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் பகுதியின் இடப்பக்கத்தில் ஐந்து வினாக்களின் எண்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் எதிரிலுள்ள வரியில் கோடிடப்பட்டுள்ள சொல் பிழையாக உள்ளது. அந்தப் பிழையான சொற்களைத் திருத்தி அச்சொற்களின் சரியான வடிவத்தை எழுதவும்**.

| | |
|---|---|
| Q11<br><br>Q12<br><br>Q13<br>Q14<br><br>Q15 | விந்தைமிகு விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் நாளுக்கு நாள் பல புதிய கருவிகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. அறிவியல் அறிஞர்கள் கண்டுபிடிக்கும் புதுமைகள் மக்களுக்குப் பெரும் பயன் அளித்து வருகின்றன. அத்தகைய <u>அறிய</u> சாதனங்களில் தொலைக்காட்சி தலைசிறந்த பொழுதுபோக்கு சாதனமாகும். இக்காலத்தில் தொலைக்காட்சி உலகெங்கிலும் பார்க்கப்படுகிறது. அதில் சொற்பொழிவு, இன்னிசை, நடனம், நாடகம், திரைப்படம் முதலிய நிகழ்ச்சிகளை <u>அவர்கள்</u> பார்த்து மகிழலாம். மேலும், உழவு, வாணிகம், கலை முதலிய பல துறைகளைப் பற்றிய செய்திகளைப் படம் பிடித்து ஒளிபரப்புவதால் அத்துறையில் உள்ள மக்கள் பயன் பெற நல்ல வாய்ப்பாகிறது. வாணிகப் பெருமக்களுக்கு விளம்பரச் சாதனமாக <u>இவை</u> அமைகிறது. மேலும், மாணவர்களின் கல்வி <u>வளர்ச்சியால்</u> மிகவும் பயன்படுகிறது. உலகின் பல்வேறு இடங்களில் நடைபெறும் விளையாட்டு நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது. நாம் சென்று காண முடியாத இடங்களையும் <u>கட்சிகளையும்</u> போர்களையும் காட்டில் வாழும் உயிர்களின் இயல்புகளையும் பிறவற்றையும் கண்டு உலகியலை அறிய முடிகிறது. இவ்வளவில் தொலைக்காட்சிகள் நமக்கு பேருதவி புரிகின்றன. |

Q11 ________________________

Q12 ________________________

Q13 ________________________

Q14 ________________________

Q15 ________________________

## ‘ஆ’ பிரிவு

**B4 தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு விடை தருக. வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை எழுதுக.**

**பகுதி 1**



தெனாலிராமன் கதைகளை விரும்பாத சிறுவர்களே இல்லை எனலாம். நம்மைச் சிந்திக்க வைக்கும் இக்கதைகள் நகைச்சுவை உணர்வுடன் எழுதப்பட்டிருப்பது சிறுவர்களை மட்டும் அல்ல பெரியவர்களையும் கவரத் தவறாது. தமிழ் மொழியில் எழுதப்பட்ட இக்கதைகளின் எளிமையையும் இனிமையையும் கருதிப் பிற மொழிகளிலும் இக்கதைகளை **மொழிபெயர்த்துள்ளனர்**.

இக்கதைகளில் வரும் தெனாலிராமன் என்ற கதாப்பாத்திரம் அரசவை **விகடகவி**யாகப் பொறுப்பேற்று மன்னனுக்குப் பல ஆலோசனைகளை எடுத்துரைக்கிறார். அதுமட்டுமில்லாமல் இவர் நாட்டு மக்களையும் தன் **சமயோஜிதப் புத்தி**யின் வழி நல்வழிப்படுத்துகிறார். மன்னர் தீர்த்து வைக்க முடியாத பல பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டு அவரின் **நன்மதிப்பைப்** பெறுகிறார். தெனாலிராமன் கதைகள் நூல் வடிவில் மட்டுமன்றித் தற்போது ஒளிக்காட்சி வடிவிலும் இடம்பெற்றுள்ளன.

**வினாக்கள்**

Q16 தெனாலிராமன் கதைகளைப் பெரியவர்களும் விரும்பக் காரணம் என்ன?

1. இவை எளிமையாகவும் இனிமையாகவும் இருப்பதால்
2. இவை படிப்பவர்களைச் சிரிக்க வைப்பதால்
3. இவை தமிழ்மொழியில் எழுதப்பட்டிருப்பதால்
4. இவற்றைச் சிறுவர்களும் விரும்புவதால் ( )

Q17 தெனாலிராமனுக்கு எப்போது மன்னனிடமிருந்து நன்மதிப்புக் கிடைக்கும்?

1. மன்னனுக்குப் பல ஆலோசனைகள் கூறும்போது
2. அரச விகடகவியாகப் பொறுப்பேற்கும்போது
3. நாட்டு மக்களின் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும்போது
4. மன்னரின் தீராத பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும்போது ( )

**பகுதி 2**



இக்கால இளையர்களை **<u>வெகு</u>**வாக ஈர்ப்பது ஆடைகள். ஆடைகள் தற்போது பல வண்ணங்களிலும் வடிவங்களிலும் வருகின்றன. ஆடைகளில் பலவகை உண்டு. பாரம்பரிய ஆடைகள், அலுவலக ஆடைகள், மேற்கத்திய ஆடைகள், சிறப்பு **<u>வைபவங்களுக்கு</u>** அணிந்து செல்லும் ஆடைகள் என்று விதவிதமானவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம். இவற்றில் தற்போது நம் இளையர்களை அதிகமாக ஈர்த்திருப்பது மேற்கத்திய ஆடைகள் என்றால் அது மிகையாகாது.

ஜீன்ஸ், டீ-சட்டை, குட்டைப் பாவாடை, அரைக்கால் அல்லது முக்கால் கால்சட்டை போன்ற ஆடைகளை மேற்கத்தியர்கள் விரும்பி அணிகிறார்கள். இவற்றை *உலகளாவிய இளையர்களும் தற்போது அணிந்து வருகிறார்கள்.* இத்தகைய உடைகள் நம் உடலுக்கு அதிக வெப்பத்தை உண்டாக்காமல் உடலைக் காற்றோட்டமாக வைத்திருக்கிறது. ஜீன்ஸ், டீ-சட்டை போன்ற உடைகள் குனிந்து நிமிர்ந்து வேலை செய்வதற்கு ஏதுவாக இருக்கின்றன. மேலும், நினைத்தவுடன் ஒரு சில நிமிடங்களில் இந்த உடைகளை அணிந்து கொண்டு ஒருவர் வெளியில் செல்வதற்குத் தயாராக முடியும்.

பாரம்பரிய உடைகளையும் அலுவலக உடைகளையும் சூழலுக்கு ஏற்றாற்போல்தான் நாம் அணிய முடிகிறது. எனவே, அவற்றை அதிகமாக உடுத்திக் கொள்வதில் இளையர்கள் ஆர்வம் காட்டுவதில்லை. ஆடை என்பது நம் உடலை மறைப்பதற்கு மட்டுமல்ல; அது ஒருவரின் குணத்தையும் பண்பையும் வெளிக்காட்டுகிறது. பொருத்தமான ஆடைகளைப் பொருத்தமான சூழல்களில் அணிவது மிகவும் இன்றியமையாதது. அவ்வாறு செய்யாவிடில் பிறரின் கேலிக்கும் கிண்டலுக்கும் நாம் ஆளாகிவிடுவோம் என்பதை இளையர்கள் மறந்து விடக்கூடாது.

WORDSMITH BEYOND LEARNING

**வினாக்கள்**

Q18 எத்தகைய ஆடைகள் இக்கால இளையர்களை அதிகம் கவர்ந்துள்ளது?

1. பல வண்ணங்களிலும் வடிவங்களிலும் இருக்கும் ஆடைகள்
2. சிறப்பு வைபவங்களுக்கு அணிந்து செல்லும் ஆடைகள்
3. பலதரப்பட்ட விதவிதமான ஆடைகள்
4. மேற்கத்தியர்கள் விரும்பி அணியும் ஆடைகள் ( )

Q19 மேற்கத்திய உடைகளை *உலகளாவிய இளையர்களும் தற்போது அணிந்து வருகிறார்கள்* என்று கட்டுரையாசிரியர் கூறக் காரணம் என்ன?

1. அவை உடலுக்கு அதிக வெப்பத்தைக் கொடுப்பதில்லை
2. அவை உடலைக் காற்றோட்டமாக வைத்திருக்கின்றன
3. அவை உடலுக்குப் பல சௌகரியங்களைத் தருகின்றன
4. அவற்றைச் சீக்கிரமாக அணிந்து கொள்ள முடிகின்றது ( )

Q20 பாரம்பரிய உடைகளை ஏன் இளையர்கள் அதிகம் அணிய விரும்புவதில்லை?

1. அவற்றை எல்லா இடங்களுக்கும் அணிய முடியாததால்
2. அவை அவர்களுக்குப் பொருத்தமாக இல்லாததால்
3. பிறர் அவர்களைக் கிண்டலும் கேலியும் செய்வார்கள் என்பதால்
4. அவை நம் குணங்களையும் பண்புகளையும் வெளிப்படுத்துவதால் ( )

WORDSMITH BEYOND LEARNING

**'இ' பிரிவு**

**C5 சுயவிடைக் கருத்தறிதல் (30 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை தருக.**



1. வாழைமரம் போல வேப்பமரமும் நம் தமிழர்களின் வாழ்க்கையோடு **<u>இயைந்த</u>** ஒன்று. வேப்பமரத்தின் அருமை பெருமைகளை உணர்ந்து நம் முன்னோர்கள் அதனைத் தத்தம் வீடுகளில் நட்டு வைத்தார்கள். அது அள்ளித் தரும் எல்லையில்லாப் பயன்களைத் தாமும் அனுபவித்து அதைப் பற்றி மற்றவர்களுக்கும் கூறி வந்தார்கள். வேப்பமரத்தின் இலை, பூ, காய், பட்டை என அனைத்திலும் மருத்துவக் குணங்கள் திரண்டிருக்கின்றன. வேப்பமரத்தின் ஒவ்வொரு பாகமும் ஆயிரம் பொன்னுக்குச் சமம் என்றால் அது மிகையாகாது!

2. வேப்பிலை தமிழர்களுக்குக் கிடைத்த ஓர் **<u>அருமருந்து</u>**. இது நல்லதொரு மூலிகையாகவும் பயன்படுகிறது. நம் முன்னோர்கள் சிறு பிள்ளைகளின் வயிற்றிலிருக்கும் பூச்சியை வெளியேற்றுவதற்கும் வயிற்றுச் சம்மந்தமான நோய்களைத் தீர்ப்பதற்கும் வேப்பிலைச் சாற்றினைக் கொடுத்து வந்தார்கள். அது வயிற்றுக் **<u>கோளாறு</u>**களுக்கு உடனடியான **<u>நிவாரணம்</u>** அளித்தது. யோகப் பயிற்சி செய்பவர்களும் வேப்பிலையை அறைத்து, உருண்டையாக்கி அதனை

உட்கொண்டனர். அவ்வாறு செய்வது அவர்களின் உடலைச் சீராக்கி, அவர்களுக்குப் புதுத்தெம்பையும் புத்துணர்ச்சியையும் வழங்கியது.

3. வேப்பிலை **தண்மை** வாய்ந்தது. பொதுவாக அம்மை நோய் கண்டிருப்பவர்களுக்கு ‘வேப்பிலைப்படுக்கை’ செய்து அதில் அவர்களைப் படுக்க வைப்பார்கள். வேப்பிலை **கலந்த** நீரில் குளிக்க வைப்பார்கள். வேப்பிலை கொத்தை அவர்களின் உடலில் **நீவி** விடுவார்கள். அம்மை நோய் உடலின் வெப்பத்தன்மையை அதிகரிக்கும் என்பதால் தமிழர்கள் இப்பழக்கத்தைக் கடைப்பிடித்து வந்தார்கள்.

4. தொற்று நோய்கள் கிராமங்களைவிட நகரப் பகுதிகளில்தான் விரைவாகப் பரவுகின்றன. இதற்குக் காரணம், நகரங்களில் அதிகமாக வேப்பமரங்கள் இல்லாததே ஆகும். வேப்பமரத்திலிருந்து வீசும் காற்றுக்கூட ஒருவித மருத்துவக்குணம் **வாய்ந்தது** என்று நம்பப்படுகிறது. இக்காற்று நமது சுற்றுப்புறத்தில் சுற்றித் திரியும் ‘வைரஸ்’, ‘பாக்டீரியா’ போன்ற **நுண்ணுயிர்** கிருமிகளை அழிக்க வல்லதாம். எனவேதான், வீட்டு வாசலில் வேப்பமரம் இருப்பது ஒரு *மருத்துவருக்குச் சமம்* என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளார்கள்.

5. வேப்பமரங்கள் கோடைகாலத்தில்தான் **தழைத்து** வளர்கின்றன. இவை கோடைக்கால வெயிலுக்கு நிழலாய் அமைந்து மக்களை அதிக வெப்பத்திலிருந்து காக்கின்றன. இம்மரங்களை உற்று நோக்குவதும் கண்களுக்குக் குளிர்ச்சியைத் தருகின்றன. எனவேதான், கிராமப்புறங்களில் வேப்பமரங்களை ஆங்காங்கே நட்டு வைத்திருப்பார்கள்.

WORDSMITH
BEYOND LEARNING

**வினாக்கள்**

Q21 வேப்பமரம் தமிழர்களின் வாழ்க்கையில் இயைந்தது என்று ஏன் கூறப்படுகிறது?
(4 மதிப்பெண்கள்)

Q22 வேப்பிலை நோய் தீர்க்கும் அருமருந்தாக எவ்வாறு பயன்படுகிறது? (4 மதிப்பெண்கள்)

Q23 அம்மை நோய் கண்டவர்களுக்கு வேப்பிலை எவ்விதம் பயனளிக்கிறது? (4 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q24 வேப்பமரம் ஒரு *மருத்துவருக்குச் சமம்* என்று கட்டுரையாசிரியர் கூறக் காரணம் என்ன? (5 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q25 வேப்பமரங்களை நட்டு வைப்பதால் விளையும் நன்மை என்ன? (4 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q26 நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற சில வாழ்வியல் கூறுகள் என்னென்ன? (5 மதிப்பெண்கள்)

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

**இடம் நோக்கி பொருள் எழுதுக (4 மதிப்பெண்கள்)**

**பின்வரும் சொற்களுக்கு இணையான சொற்கள் வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பத்தியில் இடம்பெற்றுள்ளன. அதனைக் கண்டறிந்து விடைத்தாளில் எழுதுக.**

WORDSMITH LEARNING

Q27 பத்தி 1-இல் 'ஒன்றிணைந்திருக்கின்றன' என்னும் சொல்லுக்கு இணையாக இடம்பெற்றுள்ள வேறு சொல் எது? (2 மதிப்பெண்கள்)

EQ SKILLS = JUMP gradES + achieve Big

________________________________

Q28 பத்தி 4-இல் 'ஒழிக்க' என்னும் சொல்லுக்கு இணையாக இடம்பெற்றுள்ள வேறு சொல் எது? (2 மதிப்பெண்கள்)

________________________________

**SEC 2 O-LEVEL EXAM REVISION WORKSHEETS (PAPER 2) - LEVEL 2**
**உயர்நிலை 2 சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 2**

## அருஞ்சொற்பொருள்

| தேர்வுத்தாள் 1 | | | |
|---|---|---|---|
| **எண்** | **அருஞ்சொல்** | **பொருள்** | **English Meaning** |
| 1. | மெச்சுதல் (மெச்சினர்) | புகழ்தல் | Appreciate |
| 2. | ஆசி | வாழ்த்து | Blessing |
| 3. | உகந்த | தகுந்த | Optimal |
| 4. | மொழிப்பெயர்ப்பு (மொழிப்பெயர்த்துள்ளனர்) | மற்றொரு மொழிக்கு மொழி மாற்றம் செய்தல் | Translation |
| 5. | விகடகவி | கோமாளி | One with humor sense / Clown |
| 6. | சமயோஜிதப் புத்தி | புத்திசாலித்தனம் | Presence of mind |
| 7. | நன்மதிப்பு (நன்மதிப்பை) | நல்ல மதிப்பு | Reputation |
| 8. | வெகு | அதிகளவு | Very much |
| 9. | வைபவம் (வைபவங்களுக்கு) | மங்கலகரமான நிகழ்வு | Occasion |
| 10. | இயைந்து (இயைந்த) | ஒன்றிணைந்து | United |
| 11. | அருமருந்து | சிறப்பு மிக்க மருந்து | Effective Remedy |
| 12. | கோளாறு | சிக்கல் | Problem |
| 13. | நிவாரணம் | துன்பம் நீங்குதல் | Relief |
| 14. | தண்மை | குளிர்ச்சி | Coldness |
| 15. | கலந்த | ஒன்றாக சேர்ந்த | Mix |
| 16. | நீவுதல் (நீவி) | தடவுதல் | Gently apply |
| 17. | வாய்ந்த (வாய்ந்தது) | கொண்ட | Contain |
| 18. | நுண்ணுயிர் | கண்ணுக்குத் தெரியாத உயிரினம் | Microorganism |
| 19. | தழைத்தல் (தழைத்து) | செழிப்பு | Flourish |

**SEC 2 - O-LEVEL EXAM REVISION WORKSHEETS (PAPER 2 - LEVEL 2)**
**உயர்நிலை 2 - சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் நிலை 2 (தாள் 2)**

# விடைத்தாள்

**தேர்வுத்தாள் 1**

**A1 மரபுத்தொடர்கள், இணைமொழிகள், செய்யுள்கள்**

| | | |
|---|---|---|
| Q1 | ஓய்வு ஒழிச்சலின்றி | (1) |
| Q2 | நகுக அதனை | (4) |
| Q3 | மனக்கோட்டை | (9) |
| Q4 | கைகொடுத்ததை | (2) |
| Q5 | காலில் விழுந்து | (7) |

**A2 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

| | | |
|---|---|---|
| Q6 | மறந்துவிட | (8) |
| Q7 | ஒன்றிவிட்ட | (9) |
| Q8 | போன்றவற்றை | (7) |
| Q9 | பழக்கமாக | (2) |
| Q10 | தேவையில்லை | (6) |

**A3 பிழை திருத்தம்**

| | |
|---|---|
| Q11 | அரிய |
| Q12 | நாம் |
| Q13 | இது |
| Q14 | வளர்ச்சிக்கு |
| Q15 | காட்சிகளையும் |

**B4 தெரிவுவிடைக் கருத்தறிதல்**

| | |
|---|---|
| Q16 | 2 |
| Q17 | 4 |
| Q18 | 4 |
| Q19 | 3 |
| Q20 | 1 |

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP GRADES + achieve BIG